# சூப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்டா?...

**மதுரை, திருமங்கலத்தில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சூறாவளி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது நடைபெற்ற தேர்தல் பிரச்சார பரப்புரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,**

**சூப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்டா,**
**தி.மு.க.தேர்தல் அறிக்கைன்னு**
**சின்ன குழந்தையும் சொல்லும்”**

- என்ற பாடலை முதன் முதலாக பாடி பிரச்சாரம் மேற்கொண்டார்.

**முதல்வர் அவர்கள் பாடிய இப்பாடலையே மெட்டாக வைத்து தி.மு.க. தேர்தல் அறிக்கை குறித்து பாடகர் ஒருவர் பாடிய பாடல் தற்போது சமூகவலைதளங்களில் வைரலாகி வருகிறது. இப்பாடலின் இடையிடையே முதல்வர்தேர்தல் பிரச்சாரத்தின் போது பாடிய அந்த பாடல் வரிகளும் இடம் பெற்றுள்ளன என்பது இப் பாடலில் அமைந்துள்ள ஹைலைட் ஆகும்.**

சமூக வலைதளங்களில் வைரலாகி வரும் தி.மு.க. தேர்தல் அறிக்கை குறித்த அப்பாடல் இதோ;

**சூப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்ட**
**தி.மு.க.தேர்தல் அறிக்கைன்னு**
**சின்ன குழந்தையும் சொல்லும்**

**-முதல்வர் மு.க.ஸ்டாலின் பாடிய இவ்வரிகள் முதலில் ஒலிபரப்பாகி தொடர்ந்து பாடகர் பாடிய பாடல்,**

**சூப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்டா**
**தேர்தல் அறிக்கைன்னு சொல்லும்,**
**தி.மு.க.தேர்தல் அறிக்கையை**
**ஒருதரம் படிச்சா**
**திராவிட மாடலே வெல்லும்!**

**மக்களுக்காகவே மக்களை காக்கவே**
**ஸ்டாலின் வந்தாரய்யா!**

**(மியூசிக்)**



**சூப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்டா,**
**தேர்தல் அறிக்கைன்னு சொல்லும்!**
**தி.மு.க.தேர்தல் அறிக்கையை**
**ஒரு தரம் படிச்சா**
**திராவிட மாடலே வெல்லும்!**

**மக்களுக்காகவே மக்களை காக்கவே**
**ஸ்டாலின் வந்தாரய்யா,**
**சூப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்டா**
**தேர்தல் அறிக்கைன்னு சொல்லும்**
**தி.மு.க.தேர்தல் அறிக்கையை**
**ஒரு தரம் படிச்சா திராவிட மாடலே வெல்லும்!**

**(மியூசிக்– முதல்வர் பாடுகிறார்)**

**சூப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்டா**
**தி.மு.க. தேர்தல் அறிக்கைன்னு**
**சின்ன குழந்தையும் சொல்லும்)**
**(முதல்வர் பாடுகிறார்)**

**(மியூசிக்)**

**இஷ்டப்பட்ட பொருட்களை வாங்க**
**எட்டாயிரம் ரூபாய்!**
**மகளிர்க்கான உரிமைத் தொகையோ**
**மாதம் இரண்டாயிரம் ரூபாய்!**
**கட்டணம் இல்லாம மின் மோட்டாரு;**
**விவசாயிக்கு இலவசமா கொடுக்கப் போறாரு...!**

**(மியூசிக்)**

**புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன்**
**திட்டத்துக்காக உதவித் தொகையை**
**இரண்டு மடங்காக உயர்த்தப்போறாரு...!**
**முதியோருக்கு உதவித் தொகை**
**இரண்டாயிரம் தராரு!**
**சூப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்டா,**
**தி.மு.க.தேர்தல் அறிக்கைன்னு சொல்லும்!**
**தி.மு.க.தேர்தல் அறிக்கையை ஒரு தரம் படிச்சா**
**திராவிட மாடலே வெல்லும்!**

**(முதல்வர் வாய்ஸ்)**

**சூப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்டா,**
**தி.மு.க. தேர்தல் அறிக்கைன்னு;**
**சின்ன குழந்தையும் சொல்லும்!**

**(மியூசிக்)**

**மகளிர் சுய உதவிக் குழுவுக்கு,**
**ஐந்து லட்சம் ரூபாய் மானியம்!**
**மீனவர்க்கு தடைக்காலங்களில்,**
**உதவி – பனிரெண்டாயிரம்!**
**உயர்கல்வி பயில்கின்ற மாணவர்க்கு,**
**முப்பத்தைந்து இலட்சம் லேப் – டாப்!**

**(மியூசிக்)**

**ஐம்பது இலட்சம் மாணவர்க்கு,**
**அந்நிய முதலீட்டில் வேலைவாய்ப்பு!**
**ஐந்து இலட்சம் கோவிலுக்கு,**
**குடமுழுக்கு இருக்கு!**

**சூப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்டா;**
**தேர்தல் அறிக்கைன்னு சொல்லும்!**
**தி.மு.க. தேர்தல் அறிக்கையை**
**ஒருதரம் படிச்சா,**
**திராவிடமாடலே வெல்லும்!**

**(– முதல்வர் வாய்ஸ்–)**

**சூப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்டா;**
**தி.மு.க.தேர்தல் அறிக்கைன்னு,**
**சின்ன குழந்தையும் சொல்லும்!)**
**மாவட்டந்தோறும் உயர்கல்விக்காக,**
**சிறப்பு மாணவர் விடுதி!**
**நான் முதல்வன் திட்டத்துக்காக,**
**ஆயிரத்து ஐநூறு உதவி!**
**திருச்சி, மதுரை, கோவை, சேலம்**
**ஸ்மாட்டிலைட் நகரமாக ஆகப்போகிறது!**

**(மியூசிக்)**

**அனைத்து அரசு கல்லூரிகளிலும்**
**வை–பை வசதி கிடைக்கப்போகிறது!**
**இதுபோல,**
**ஐநூற்று பன்னிரெண்டு**
**வாக்குறுதி!**

**சூப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்டா**
**தேர்தல் அறிக்கைன்னு சொல்லும்!**
**தி.மு.க.தேர்தல் அறிக்கையை**
**ஒரு தடவை படிச்சா;**
**திராவிட மாடலே வெல்லும்!**

**திராவிட மாடல்,**
**தளபதியாரின் ‘2.O’ நமது இலக்கு!**

- பாடகர் ஒருவர் இசையுடன் பாடிய இப்பாடல் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இப்பாடலின் இடையிடையே முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாடிய சூப்பர்ஸ்டாருயாருன்னுகேட்டாதி.மு.க.தேர்தல் அறிக்கைன்னு சின்ன குழந்தையும் சொல்லும் என்ற வரிகளும் இப்பாடலுக்கு உயிரோட்டமாக அமைந்துள்ளது!



வேலூர் மாவட்டம் காட்பாடியில் கழக பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தன் வீட்டின்முன் ஒன்றிய அரசின் தொகுதி மறுவரையறையை எதிர்த்து கறுப்புக் கொடி ஏந்தி எதிர்ப்பு தெரிவித்தார். உடன் மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், காந்தி நகர் பகுதி செயலாளர் பரமசிவம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டிடாசரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலையில் கழகத்தின் முதல் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.தர்மலிங்கம் இல்லத்தில் அமைச்சர் எ.வ.வேலு தொகுதி மறுவரையறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கருப்புக் கொடி ஏற்றினார். உடன் மாவட்டக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### கடும் எதிர்ப்பையும் மீறி

## நாடாளுமன்றத்தில் தொகுதி மறுவரையறை மசோதா அறிமுகம்!

### தி.மு.க. சார்பில் டி.ஆர்.பாலு – ஆ.ராசா கண்டித்து பேச்சு!

புதுடெல்லி, ஏப். 17–

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பையும் மீறி, தொகுதி மறுவரையறை மசோதாவை ஒன்றிய பா.ஜ.க. அரசு அறிமுகம் செய்தது. இந்த மசோதா, கூட்டாட்சிக்கும், அரசியல் சாசனத்திற்கும் எதிரானது என திமுக கடும் கண்டனம் தெரிவித்தது

தமிழ்நாடு மற்றும் மேற்குவங்கத் தேர்தலுக்கு இடையில் நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடர் வலுக்கட்டாயமாகக் கூட்டப்பட்டு நேற்று தொடங்கியது. ஒன்றிய பாஜக அரசுக்கு கண்டனம் தெரிவித்து திமுக எம்.பிக்கள், கருப்பு உடை அணிந்து நாடாளுமன்றத்தில் பங்கேற்றனர்.

காலை 11 மணிக்கு அவை கூடியதும் தொகுதி மறுவரையறை உள்ளிட்ட மூன்று மசோதாக்களை அவையில் முன்மொழிய அனுமதி கோரப்பட்டது. தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட இந்திய கூட்டணி கட்சிகள் அறிமுக நிலையிலேயே கடும் எதிர்ப்பு தெரிவித்தன.

அப்போது பேசிய மக்களவை திமுக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு திமுக கடும் எதிர்ப்பு தெரிவிப்பதாக கூறினார். தொகுதி மறுவரையறையை குறுக்குவழியில் திணிக்க ஒன்றிய அரசு முயற்சிப்பதாக குற்றம் சாட்டினார். ஒன்றிய அரசு தற்போது கொண்டுவந்துள்ள தொகுதி மறுவரையறை மசோதாவால் இந்தியாவின் ஜனநாயகத்துக்கே ஆபத்து என்றும் டி.ஆர்.பாலு கூறினார்..

தொடர்ந்து 3 மசோதாக்களையும் தனித்தனியாக கொண்டுவர ஒன்றிய அரசு முன்வரவில்லை இதனால், 3 மசோதாக்களையும் புரிந்து கொள்வதில் கடினமாக இருக்கிறது 2023 ஆம் ஆண்டே மகளிர் மசோதா நிறைவேற்றப்பட்டுவிட்டது

அதன்பிறகு மசோதாவை செயல்படுத்தாமல் இருந்தீர்கள் தற்போது, புதிய மசோதா தேவை இல்லை தொகுதி மறுவரையறை, மக்கள்தொகை கணக்கெடுப்பு மூலம்தான் நிறைவேற்ற முடியும் என கூறுகிறீர்கள்

தொகுதி மறுவரைறை மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்து அதன் நகலை திமுக தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எரித்துள்ளார்

அதே நேரம் மகளிர் இடஒதுக்கீடு மசோதாவைதிமுக ஆதரிக்கிறது நாடாளுமன்றம், சட்டமன்றத்தில் மகளிருக்கு 33% இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை உடனடியாக செயல்படுத்தும் கோரிக்கையில் திமுக உறுதியுடன் இருக்கிறது என்று டி.ஆர்.பாலு குறிப்பிட்டார்.

இதைத்தொடர்ந்து பேசிய மக்களவை திமுக கொறடா ஆ.ராசா, அரசியல் சாசன மசோதாவையும், தொகுதி சீரமைப்பு மசோதாவையும் ஒன்றாக இணைத்து விவாதம் நடத்த கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

தொடர்ந்து அரசியல் சாசன மசோதாவையும், தொகுதி சீரமைப்பு மசோதாவையும் ஒன்றாக இணைத்து கொண்டுவர கூடாது

முதலில் தொகுதி மறுவரையறை மசோதாவை கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும் முதலில் தொகுதி மறுவரையறை மசோதா மீது விவாதம் நடத்த வேண்டும்

அதன்பிறகு தான் அரசியல் சாசன மசோதாகை கொண்டுவர வேண்டும் இதுதான் நடைமுறை என்று ஆ.ராசா தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பை மீறி மக்களவையில் 3 மசோதாக்கள் அறிமுகம் செய்யப்பட்டது. தொகுதி மறுவரையறை மசோதாவை மக்களவையில் அறிமுகம் செய்ய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. மக்களவையில் 543 உறுப்பினர்கள் உள்ள நிலையில் வாக்கெடுப்பில் 436 பேர் பங்கேற்றனர். தொகுதி மறுவரையறை மசோதாவை அறிமுகம் செய்ய 251 பேர் வாக்களித்தனர். 185 எம்.பி.க்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

தொகுதி மறுவரையறை உள்ளிட்ட 3 மசோதாக்கள் மீது 12 மணி நேரம் விவாதம் நடைபெறும் என்று சபாநாயகர் அறிவித்துள்ளார். 3 மசோதாக்கள் மீதும் இன்று (17.4.2026) மாலை 4 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.

இதற்கிடையே, தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து மாநிலங்களவையில் எதிர்க்கட்சி எம்.பிக்கள் முழக்கங்களை எழுப்பியதால், நாள் முழுவதும் அவை ஒத்திவைக்கப்பட்டது.



**தமிழர்களை இழிவு படுத்தி, நெருப்புடன் விளையாட எண்ணும் பாசிஸ பாஜகவையும், துணை போகும் துரோகிகளையும் துரத்தியடிப்போம் ! அந்த சமூக விரோத சக்திகளைத் தடை செய்யும் ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும் !**